# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

## அரையாண்டு –மதிப்பீட்டுத் தாள்

## 2020 – 2021

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 6

சுட்டெண்:............................................................ நேரம்: 150 மணித்துளிகள்

1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. நெட்டெழுத்துக்கு எடுத்துக்காட்டு:

அ ) தொ ☐ ஆ ) உ ☐

இ ) க் ☐ ஈ ) ஆ ☐

2. கீரிமலையில் அமைந்துள்ள ஈச்சுரம்

அ ) திருக்கோணேச்சுரம் ☐ ஆ ) தம்பலேச்சுரம் ☐

இ ) திருக்கேதீச்சுரம் ☐ ஈ ) முன்னீச்சுரம் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

3. காவலன் அளித்த நீரைக் கையாலும் தொடாமல் உயிர் நீத்த மன்னன்

அ ) இரும்பொறை ☐ ஆ ) குமணன் ☐

இ ) செங்கணான் ☐ ஈ ) பாரி ☐

4. ஈகை என்பது

அ ) சிறப்பு ☐ ஆ ) உயர்வு ☐

இ ) ஏழ்மை ☐ ஈ ) கொடை ☐

5. ஒருமை, பன்மை என்பன

அ ) திணை ☐ ஆ ) எண் ☐

இ ) பால் ☐ ஈ ) படர்க்கை ☐

TEDC

6. சுட்டாலும் வெண்மை தருவது

அ ) சங்கு ☐ ஆ ) விறகு ☐

இ ) பானை ☐ ஈ ) இரும்பு ☐

7. மக்களின் புறத்தோற்ற வளர்ச்சி

அ ) நாகரிகம் ☐ ஆ ) ஒழுக்கம் ☐

இ ) உயர்வு ☐ ஈ ) பண்பாடு ☐

8. வீரர்கள் என்பது

அ ) ஒன்றன்பால் ☐ ஆ ) பலர்பால் ☐

இ ) ஆண்பால் ☐ ஈ ) பெண்பால் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

9. **பழமொழி:**

அரசன் இல்லாத நாடு அச்சில்லாத ____________.

அ ) தேர் ☐ ஆ ) வண்டி ☐

இ ) பல்லக்கு ☐ ஈ ) குடை ☐

10. காலையில் தாமரை அழகாக மலர்ந்தது. இச் சொல்லியத்தின் எழுவாய்

அ ) காலை ☐ ஆ ) அழகாக ☐

இ ) தாமரை ☐ ஈ ) மலர்ந்தது ☐

11. ஆமையுடன் நட்பாக இருந்த பறவைகள்

அ ) புறாக்கள் ☐ ஆ ) கொக்குகள் ☐

இ ) காகங்கள் ☐ ஈ ) பருந்துகள் ☐

TEDC

12. நான் + ஐ =

அ ) நானை ☐ ஆ ) என்னை ☐

இ ) உன்னை ☐ ஈ ) எங்களை ☐

13. யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னன்

அ ) கயிலைவன்னியன் ☐ ஆ ) சங்கிலியன் ☐

இ ) பண்டாரவன்னியன் ☐ ஈ ) எல்லாளன் ☐

14. காகித ஆலை அமைந்துள்ள இடம்

அ ) வாழைச்சேனை ☐ ஆ ) யாழ்ப்பாணம் ☐

இ ) வவுனியா ☐ ஈ ) உடுவில் ☐

15. மணிபல்லவம் இன்று_____________ என அழைக்கப்படுகிறது.

அ ) கச்சைதீவு ☐ ஆ ) நயினாதீவு ☐

இ ) அனலைதீவு ☐ ஈ ) நெடுந்தீவு ☐

16. முன்னிலை இடத்தைக் குறிக்கும் சொல்

அ ) அவர்கள் ☐ ஆ ) மாணவர்கள் ☐

இ ) நாங்கள் ☐ ஈ ) நீங்கள் ☐

17. தாயகத்தில் துயிலும் இல்லங்கள் _____________ .

அ ) அழிக்கப்பட்டன ☐ ஆ ) அளிக்கப்பட்டன ☐

இ ) அலிக்கப்பட்டன ☐ ஈ ) அழிக்கப்பட்டது ☐

18. இலங்கைத்தீவு முழுவதையும் கைப்பற்றியவர்கள்

அ ) போர்த்துக்கேயர் ☐ ஆ ) ஒல்லாந்தர் ☐

இ ) பறங்கியர் ☐ ஈ ) ஆங்கிலேயர் ☐

19. நாகரின் ஆட்சி நடந்த இடம் ____________ .

அ ) தென் இலங்கை ☐ ஆ ) வடஇலங்கை ☐

இ ) கிழக்கு இலங்கை ☐ ஈ ) மேற்கு இலங்கை ☐

20. பெயர்ச்சொல் ____________ வகைப்படும்.

அ ) இரண்டு ☐ ஆ ) ஐந்து ☐

இ ) ஆறு ☐ ஈ ) மூன்று ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

21. 'பெரியோரது சொல்லைக் கேட்காவிட்டால் ____________ நேரிடும்.

அ ) இன்பம் ☐ ஆ ) துன்பம் ☐

இ ) உயர்வு ☐ ஈ ) சிறப்பு ☐

22. பட்டி பெருக வேணும் எனும் பாடல்

அ ) அறுவடைப்பாடல் ☐ ஆ ) காதற்பாடல் ☐

இ ) தாலாட்டுப்பாடல் ☐ ஈ ) ஏர்ப்பாடல் ☐

23. பாடினர் என்பது

அ ) இறந்தகாலம் ☐ ஆ ) நிகழ்காலம் ☐

இ ) எதிர்காலம் ☐ ஈ ) வருங்காலம் ☐

24. வானோக்கி வாழு முலகெல்லா ____________

கோனோக்கி வாழுங் குடி

அ ) தென்னவன் ☐ ஆ ) வல்லவன் ☐

இ ) மன்னவன் ☐ ஈ ) சின்னவன் ☐

TEDC

25. இரவு என்பது

அ ) இடப்பெயர் ☐ ஆ ) காலப்பெயர் ☐

இ ) குணப்பெயர் ☐ ஈ ) தொழிற்பெயர் ☐

26. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்

அ ) மகிழ்ச்சி ☐ ஆ ) உவகை ☐

இ ) களிப்பு ☐ ஈ ) இடுக்கண் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

27. எல்லாளன் ______ ஆண்டுகள் இலங்கையை ஆண்டான்.

அ ) 44 ☐ ஆ ) 22 ☐

இ ) 32 ☐ ஈ ) 20 ☐

28. கிளி கனிந்த பழத்தைக் கொத்தியது. இதில் வந்துள்ள அடைமொழி

அ ) கொத்தியது ☐ ஆ ) பழத்தை ☐

இ ) கனிந்த ☐ ஈ ) கிளி ☐

29. "பூவாதே காய்க்கும் மரமும் உள .." எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல்

அ) திருக்குறள் ☐ ஆ ) நன்னெறி ☐

இ ) மூதுரை ☐ ஈ ) நல்வழி ☐

30. முதலில் இலங்கைக்கு வந்த ஐரோப்பியர்

அ ) போர்த்துக்கேயர் ☐ ஆ ) ஒல்லாந்தர் ☐

இ ) ஆங்கிலேயர் ☐ ஈ ) ஆரியர் ☐

TEDC

புள்ளிகள் 30

2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

உலக மக்களுக்கு உணவளிக்கும் தொழிலே உழவுத்தொழில். உழவுத்தொழிலானது பயிர்ச்செய்கை, மந்தைவளர்ப்பு எனப் பல பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதில் பயிர்ச்செய்கை என்பது நெல் குரக்கன், பயறு, உழுந்து போன்ற கூலங்கள் பயிரிடுதல், காய்கறிச்செடிகள் பயிரிடுதல் போன்றவையாகும். மந்தை வளர்ப்பு என்றால் ஆடு, மாடுகளை வளர்த்துப் பயன் பெறுதல் ஆகும். உழவர் தங்கள் உடலை வருத்தி உணவு உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். உழவர் சேற்றில் இறங்காவிட்டால் எமக்குச் சோறு கிடைக்காது. உழவுத் தொழில் வளர்ச்சி அடைந்தால் பசி என்ற பேச்சுக்கே இடமில்லை. இத்தொழில் நடைபெறாவிட்டால் நாம் உயிர் வாழவும் முடியாது.அதனாலன்றோ “உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை.” என்று ஔவையாரும் கூறியுள்ளார்.

1. உடலை வருத்தி உணவு உற்பத்தியில் ஈடுபடுபவர் யார்?

_______________________________________________

2. மந்தை வளர்ப்பு என்றால் என்ன?

_______________________________________________

3. உழவர் சேற்றில் இறங்காவிட்டால் எமக்கு என்ன கிடைக்காது?

_______________________________________________

4. உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை எனக் கூறியவர் யார்?

_______________________________________________

5. கூலங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

_______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. எல்லாளமன்னன் யாரை வெற்றி கொண்டான்?

______________________________

2. குமணமன்னனைத் தேடிச் சென்ற புலவருக்கு மன்னன் எதைத் தர முன்வந்தான்?

______________________________

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

3. தாயகத்தில் இயற்கைத்துறைமுகம் எங்கே அமைந்துள்ளது?

______________________________

4. பண்டைக்காலத்தில் இலங்கையில் எத்தனை அரசுகள் இருந்தன?

______________________________

5. எல்லாளன் கட்டிய குளத்தின் பெயர் என்ன?

______________________________

6. யாரால் நாட்டுப்புறப்பாடல்கள் பாடப்படுகின்றன?

______________________________

TEDC

7. தமிழர் பண்பாடுகளுள் இரண்டைத் தருக.

______________________________

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## சாலை விதிகள்

| | | |
|---|---|---|
| யாருக்கும் | கற்று | பட்டம் |
| பாதை | இடத்தில் | |

பள்ளி செல்லும் பிள்ளையே
பாடம் ஒன்று ________________ க் கொள்
நல்ல சாலை விதிகளை
நன்கு மனத்துள் வைத்துக்கொள்

நடக்கும் ________________ வழியிலே
நாளும் நீயும் நடக்கணும்
கடக்கும் ________________ கவனமாய்
கடந்து போகத் தெரியணும்

பாதையில் பந்து பம்பரம்
________________ போன்ற விளையாட்டு
வேதனை தருமே! ________________
வேண்டாம் இவற்றைத் - தவிர்த்திடு!

புள்ளிகள் 10

தமிழர் கல்வி
TEDC

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

   இடப்பெயர் ____________________

   பொருட்பெயர் ____________________

   குணப்பெயர் ____________________

2 பொருத்தமாக நிரப்புக.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

| **இறந்தகாலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
|---|---|---|
| __________ | எழுதுகிறான் | __________ |
| ஓடியது | __________ | __________ |
| __________ | __________ | வருவார்கள் |

3. பின்வருவன எவ்வகை மெய்யெழுத்துகள் என இனங்கண்டு எழுதுக.

   1. ய் ர் ல் வ் ழ் ள் ____________________

   2. ங் ஞ் ண் ந் ம் ன் ____________________

4. சொல்லியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருளைத் தருக.

   1. எல்லாளன் அநுராதபுரத்தை ஆண்டான்.
   2. புலவர் மன்னனை வாழ்த்தினார்.

| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|
| __________ | __________ | __________ |
| __________ | __________ | __________ |

TEDC

5. பின்வரும் சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியங்கள் எழுதுக.

   1. பெற்றோர் ______________________________

   2. கதிரவன் ______________________________

**புள்ளிகள் 15**

6) **பந்தியைத் வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

**கோடைகால விடுமுறைக்கு ஈழவன் தன் பெற்றோருடன் கடற்கரைக்குச் சென்றான். அங்கே மக்கள் அதிகமாகக் காணப்பட்டனர். அவர்களில் பலர் கடலில் நீந்திக் கொண்டிருந்தனர். சிறுவர்கள் சிலர் கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்தனர். ஈழவன் கடற்கரையில் மணல்வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது மழை பெய்யத் தொடங்கியது. மழையினால் அவன் கட்டிய மணல்வீடு அழிந்தது. அவன் அழுது கொண்டு தன் பெற்றோருடன் வீட்டுக்குத் திரும்பினான்.**

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 80 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- எல்லாளன்
- மூட ஆமை
- நீர் சென்ற சுற்றுலா

புள்ளிகள் 20

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC